**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 99/2004**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr.III Bench Clerk of this court, on 25.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : சுப்ரமணி Father's Name : பெரியசாமி

துவக்க நேரம் : 01.25 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) தாவா சொத்திலிருந்து சுமார் 500 அடி தூரத்தில் வடகிழக்கு திசையில் எனக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் கிணறு உள்ளதாக கூறியுள்ள நிலையில் எந்த சர்வே எண்ணில் கிணறு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வாதி முதலில் எந்தெந்த சர்வே எண்கள் குறித்து வழக்கு தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் பிரதிவாதி பொன்னுசாமி வாதியிடம் நிலத்தை கேட்டார், அவருக்கு நிலம் இல்லை என்று வாதி வழக்கு தாக்கல் செய்தார்.

2) தாவா சொத்து முழுவதும் வாதியின் அனுபவத்தில் இருப்பதாகவும், பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பொதுக்கிணற்றின் கிழக்குபுறத்தில் 2 கவலைதுளைகளும், கவலைவாரிகளும் உள்ளது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பொதுக்கிணற்றின் வடபுறமும்,

தென்புறமும் கவலைதுளைகளும், கவலைவாரிகளும் உள்ளதாக கூறியுள்ளது தவறு என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பொதுவரம்பிற்கு வடபுறத்தில் சிவகாமி வகையறா நிலமும், தென்புறத்தில் பெரியண்ணகவுண்டர் நிலமும் உள்ளதாக கூறியுள்ள நிலையில் அதன் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் சிவகாமியம்மாள் கிரையபத்திரத்தில் 3 சர்வே எண்கள் தவறுதலாக விடுப்பட்டுள்ளது என்று கூறியுள்ள நிலையில் அந்த சர்வே எண்கள் எவைகள் என்று தெரியுமா என்றால் தெரியாது.

3) 1-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாக கூறியுள்ள விடுதலைப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி விடுதலைப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. மேற்படி விடுதலைப்பத்திரம் போலி பத்திரம் என நான் குறிப்பிட்டுள்ளது வாதி கூறியதன்பேரில்தான் என்றால் இல்லை, ஆரம்பத்திலிருந்தே வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் நடந்த தகராறு எனக்கு தெரியும். மேற்படி விடுதலைப்பத்திரம் போலி என்பதற்காக வாதி ஏதேனும் நடவடிக்கை எடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து தாக்கல் செய்த வரைபடத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன், நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்வது தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தை வாதியின் தாயார் சிவகாமியம்மாளும், அவர்களை தொடர்ந்து வாரிசுகளும் கடந்த 90 ஆண்டுகளாக அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ளது தவறு என்றால் இல்லை, எனது அப்பா, தாத்தா சொல்லி கேள்விப்பட்டிருக்கேன். எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்து வாதி அனுபவத்தில் இருப்பது தெரியும். நான் சொல்வது தவறு என்றாலும் தாவா சொத்து 2-ம் பிரதிவாதியின் தாத்தாவான பெரியண்ணகவுண்டரும் அவருக்கு பின்பு அவரது மகன்களான 1-ம் பிரதிவாதியும்,

மெய்யப்பகவுண்டரும் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல, வாதியின் தாயாரும், 1-ம் பிரதிவாதியின் தகப்பனாரும் சரிபாதியாக அனுபவம் செய்து வந்தார்கள். நான் சொல்வது தவறு என்றாலும் வாதி வழக்கில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

5) தாவா சொத்துக்களை 1-ம் பிரதிவாதியின் தகப்பனாரும் பின்னிட்டு, 1-ம் பிரதிவாதியும், அவரது சகோதரர் மெய்யப்பகவுண்டரும் அனுபவம் செய்து வந்து பின்னர் கடந்த 11.10.1993 தேதியில் மெய்யப்பகவுண்டர் 1-ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட பாகப்பாத்தியவிடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விடுதலைப்பத்திரத்தின்படி தாவா சொத்தை 1-ம் பிரதிவாதியும், அதன்பின்னிட்டு தற்பொழுது 2-ம் பிரதிவாதியும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, அவரவர் பாகத்தை அவரவர் அனுபவம் செய்து வருகிறார்கள்.

6) எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தை சிவகாமியம்மாள் கடந்த 1993 கிரையம் பெற்று கடந்த 90 ஆண்டுகளாக அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ளது தவறு என்றால் சிவகாமியம்மாள் கிரையம் பெற்றது கடந்த 1933-ம் ஆண்டு ஆனால் தவறுதலாக 1993 என குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் கிருஷ்ணசாமி ரெட்டியார் குறித்து அவரது மகன் கோபி அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ள நிலையில் அதற்கான வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

7) எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் 4-ம் வாதி கோபி கூறியதன் அடிப்படையில் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டு அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆகையால் எனது சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் வாதி, பிரதிவாதிகளுக்கு உள்ள பிரச்சினையை பைசல் பேசியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 01.51 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.99/2004, Dt.25.09.2025.